இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 349 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 13 – செவ்வாய்க்கிழமை 29 ஜூலை 2025 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 349 : Thiruvalluvar Year - 2056 - Aadi 13 - Tuesday 29 July 2025 - Dak 12 Pages ₹ 5.00



### நலம்பெற வாழ்த்திய கலைஞரின் உடன்பிறப்புகள் உள்ளிட்ட

# அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி!

## இல்லம் திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் உருக்கமிகு பதிவு!

**சென்னை, ஜூலை 29–**

**“மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அக்கறையுடன் விசாரித்து தாம் நலம்பெற வாழ்த்திய அனைத்துக் கட்சித் தலைவர்கள், நீதியரசர்கள் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி”யை இல்லம் திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்து நேற்று முன்தினம் (27.7.2025) இல்லம் திரும்பிய பின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளங்களில் வெளியிட்ட பதிவு வருமாறு:-**

**நலம்பெற்று வீடு திரும்பினேன்!**

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அக்கறையுடன் விசாரித்து, நலம் பெற வாழ்த்திய அனைத்து அரசியல் இயக்கத் தலைவர்கள் – மக்கள் பிரதிநிதிகள் – நீதியரசர்கள் – அரசு அதிகாரிகள் – திரைக் கலைஞர்கள் – என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி!

**மருத்துவர்கள் – செவிலியர்களுக்கு நன்றி!**

மருத்துவமனையில் சிறப்பான சிகிச்சையளித்து, நான் விரைந்து நலம் பெற உறுதுணையாய் இருந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மீண்டும் அன்பும், நன்றியும்!



**உங்களுக்காக உழைப்பை வழங்கும் என் கடமையை என்றும் தொடர்வேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கத்தைக் கண்டித்து

# ‘இந்தியா கூட்டணி’ எம்.பி.க்கள் சோனியா காந்தி தலைமையில் ஆர்ப்பாட்டம்!

**புதுடெல்லி, ஜூலை 29 -**

**பீகாரில் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டதைக் கண்டித்து ‘இந்தியா கூட்டணி’ எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.**




பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியதைத் தொடர்ந்து நாடாளுமன்ற நடவடிக்கைகள் 6ம் நாளான நேற்றும் முடங்கின.

மக்களவை கூடியதும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் மூலம் 65 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கோரின. ஆனால், இக்கோரிக்கையை ஏற்க சபாநாயகர் ஓம் பிர்லா மறுத்துவிட்டார்.

இதனால், தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கங்களை எழுப்பினர். இதற்கு போட்டியாக பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளின் எம்.பி.க்களும் முழக்கமிட்டனர். இதனால், அவையில் அசாதாரண நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அவை நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைப்பதாக சபாநாயகர் அறிவித்தார். பின்னர் அவை கூடியதும் அமளி நீடித்ததால், பிற்பகல் 1 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

**மாநிலங்களவை!**

இதேபோல், மாநிலங்களவை கூடியதும், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம், சத்தீஸ்கரில், கத்தோலிக்க அருட் சகோதரிகள் மீதான தாக்குதல், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் வங்க மொழி பேசுவோர் மீதான தாக்குதல், உத்தரப்பிரதேசத்தில் பள்ளிகள் மூடல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க வேண்டும் என மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா உள்ளிட்டவர்கள் 26 ஒத்தி வைப்பு நோட்டீஸ்களை அளித்தனர்.

ஆனால், இவற்றை ஏற்க மாநிலங்களவை துணைத் தலைவர் மறுத்துவிட்டார். இதனைத் தொடர்ந்து அவை நண்பகல் 12 மணி வர ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியதும் அமளி நீடித்ததால், பிற்பகல் 2 மணி வரை மாநிலங்களவை ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் கடந்த 25ம் தேதி நிறைவடைந்தன. இதில் சுமார் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் என்கிற பெயரில் பெரும் மோசடி அரங்கேறியுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. உண்மையான வாக்காளர்களை நீக்கம் செய்ய ஏதுவாக, அவர்கள் ஒப்புதல் இல்லாமல் கையெழுத்து, ஆவணங்கள் பெறாமல் தேர்தல் அதிகாரிகள் விண்ணப்பங்களைச் சேர்த்துள்ளதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில், பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில், காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில், சோனியாகாந்தி, மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி, கனிமொழி கருணாநிதி, திருச்சி சிவா, அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கேரள எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!**

இதனிடையே சத்தீஸ்கர் மாநிலத்தில் கேரள கன்னியாஸ்திரிகள் தாக்கப்பட்டதைக் கண்டித்து கேரளாவைச் சேர்ந்த எம்.பி.க்களும் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சத்தீஸ்கர் மாநிலத்தில் கேரளாவைச் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் இருவர், பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்த நபர்களால் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்த காங்கிரஸ் கட்சி, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சிறுபான்மையினர் தாக்குதலுக்கு ஆளாவதாக குற்றம் சாட்டியது. இந்த நிலையில், கன்னியாஸ்திரிகள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கேரள எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

---

### ‘ஆபரேஷன் சிந்தூர்’ தொடர்பாக

# ஒன்றிய அரசு உண்மையை மறைக்கிறது!

## முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் குற்றச்சாட்டு!

சென்னை, ஜூலை 29 –

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான உண்மையை ஒன்றிய அரசு மறைப்பதாக முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.



தனியார் ஆங்கில இணைய தளத்திற்கு பேட்டியளித்த ப.சிதம்பரம், பஹல்காம் தாக்குதல் மற்றும் அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் குறித்து, போதுமான தகவல்களை ஒன்றிய அரசு வழங்கவில்லை என்றும் அவற்றை வெளியிடுவதற்கு ஒன்றிய அரசு விரும்பவில்லை என்றும் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.

பயங்கரவாதிகள் எங்கே, பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டார்களா அல்லது அடையாளம் காணப்பட்டார்களா என அடுக்கடுக்காக ஒன்றிய அரசுக்கு ப.சிதம்பரம் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான அதிகாரப்பூர்வ தகவல்களில் குறைபாடுகள் உள்ளதாக குற்றம் சாட்டியுள்ள முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைகள் தொடர்பாக பிரதமரோ பாதுகாப்புத்துறை அமைச்சரோ வெளியுறவுத்துறை அமைச்சரோ ஏன் விரிவான அறிக்கை வெளியிடவில்லை என்று வினவியுள்ளார். ஆபரேஷன் சிந்தூர் தொடர்பான உண்மையை ஒன்றிய அரசு மறைக்கிறது என்று தாம் கருதுவதாகவும், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது ஒன்றிய அரசின் ராஜதந்திர உத்திகளில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம் என்றும் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதல் குறித்து இத்தனை வாரங்களாக தேசிய புலனாய்வு முகமை நடத்திய விசாரணையில் தெரியவந்த தகவல்களை ஒன்றிய அரசு வெளியிட விரும்பவில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர், பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் இருந்துதான் வந்தார்கள் என, ஒன்றிய அரசு கருதுவதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது ஏற்பட்ட இழப்புகளை ஒன்றிய அரசு வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும் என்றும் ப.சிதம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

---

### ஓ.பி.சி. - எஸ்.சி. - எஸ்.டி. பிரிவினரை

# கல்லூரிப் பேராசிரியராக நியமிப்பதில் பாரபட்சம்!

## ஒன்றிய அரசு மீது குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 29 –

கல்லூரி பேராசிரியர் பணி நியமனத்தில் ஓ.பி.சி. மற்றும் எஸ்.சி., எஸ்.டி., பிரிவினரை நியமனம் செய்வதில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பாரபட்சம் காட்டியுள்ளது அம்பலமாகியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள ஒன்றிய அரசு பல்கலைக் கழகங்களில் பேராசிரியர், இணை பேராசிரியர், உதவி பேராசிரியர் உள்ளிட்ட பணியிடங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்கு ஒன்றிய கல்வி அமைச்சகம் பதில் அளித்துள்ளது.

அதில் பேராசிரியர் பணியிடங்களில் ஓ.பி.சி பிரிவில் 80% இடங்களில் நிரப்பப்படாமல் இருப்பது அம்பலமாகியுள்ளது. இதேபோல் எஸ்.சி. பிரிவினருக்கான பேராசிரியர் பணியிடங்கள் 64 சதவீதமும், எஸ்.டி. பிரிவினருக்கான இடங்களில் 83 சதவீதமும் நிரப்பப்படாமல் இருப்பது தெரியவந்துள்ளது.

ஒன்றிய அரசு பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பணியிடங்களில் 1,538 இடங்கள் பொது பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டு இருந்த நிலையில் 935 இடங்களில் மட்டுமே நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பழங்குடியினருக்கான 1,155 கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில் 727 மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இதேபோல் எஸ்.டி. பிரிவினருக்கான 2,310 இடங்களில் 1,599 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

ஓ பி சி பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட 423 பேராசிரியர் பணியிடங்களில் 84 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. மேலும் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட 38 பேராசிரியர் பணியிடங்களில் 11 மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன.

இதேபோல், இணை பேராசிரியர், உதவி பேராசிரியர் உள்ளிட்ட பணியிடங்களிலும் ஓ.பி.சி. மற்றும் எஸ்.சி., எஸ்.டி., பிரிவினரை நியமனம் செய்வதில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பாரபட்சம் காட்டியுள்ளது அம்பலமாகியுள்ளது.